# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு IV – 2021 (நிகழ்நிலை)

## மனித உரிமைகள் சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று (03)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. சுயா, மாயா மற்றும் லாயா ஆகிய மூன்றும் சுயமா என்ற குடியரசினது சுதேசிய சமுதாயத்தினராவர். அவர்கள் நாடு முழுவதும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். லாயா சமுதாயத்தினர் தாராள சிந்தனை கொண்டவர்களாகக் காணப்படுகின்ற அதேவேளை, மாயா சமுதாயத்தினர் புராதன சமூகப் பாரம்பரியங்களைப் பின்பற்றுகின்றவர்களாவர். சுயா சமுதாயத்தைச் சேர்ந்தவனான சுலக்ஷியா என்பவன் சுயமா குடியரசினது பிரதம மந்திரியவார். மூன்று சுதேசிய சமுதாயங்களுக்கு மத்தியில் ஒருசீரான சட்டத்தை உறுதி செய்வதற்காக *'சமமான எதிர்காலம்'* என்றதொரு தேசியக் கொள்யை முன்மொழிவு செய்துள்ளான். சுயா சமுகத்தினரின் குழுவொன்று அக்கொள்கைக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிப்பதுடன், சுயா சமுகத்தினரே சுயமா குடியரசினது பழம்பெரு கலாசாரத்தைக் கொண்டுள்ளவர்களாவர் என்றும் வலியுறுத்துகின்றனர். ஏனையவர்கள் சுயா சமுகத்தவரிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டவர்களாக இருப்பதனால், அவர்களுடன் ஒத்த நிலையானவர்களாக நடாத்தப்படக்கூடாது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

   நூற்றாண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்டுவந்த பாரம்பரியமொன்றான பெண்ணுறுப்பு உருச்சிதைப்பு என்ற தமது நடைமுறைகளைக் கைவிடுவதற்கு ஆயத்தமாக இல்லை என்று கோரி குறித்த கொள்கையுடன் உடன்படுவதற்கு மாயா சமுதாயத்தினர் மறுக்கின்றனர். முறையே தமது கணவன்மார் மற்றும் தந்தைமாருக்கு வழிபடுவதனை மனைவிமாருக்கும் பெண்பிள்ளைகளுக்கும் கடமையாக்கியிருக்கின்ற தொடர்ந்திருக்கும் அவர்களினது சடங்குமுறையினால் மாயா சமுதாயத்து ஆண்கள் பெருமையடைகின்றனர். மாயா சமுதாயத்துப் பெண்கள் திருமணத்துக்கான தமது சம்மதத்தைத் தெரிவிப்பதற்கும், ஏதேனும் சொத்துக்களை உழைத்து அல்லது வாரிசுரிமையாக பெற்றுக்கொண்டாலும் அவற்றை அவர்கள் சொந்தங்கொள்வதற்கும் உரிமையற்றவர்களாக இருக்கின்றனர்.

ஒருபால் திருமணமானது அங்கீகரிக்கப்படுவதனையும் மட்டுப்பாடுகளற்ற கருவழிப்பானது சட்டமுறையானதாக ஆக்கப்படுதல் வேண்டுமென்றும் லாயா சமுதாயக் குழுவொன்று ஆதரித்துவருகின்றது. பிரதம மந்திரியினால் முன்மொழியப்பட்டுள்ள தேசியக் கொள்கைக்கு லாயா சமுதாயத்தினர் ஆதவளிக்கின்றது.

மனித உரிமைகள் தொடர்பான தத்துவார்த்த அணுகுமுறைகள் மற்றும் விதிமுறைக் கட்டமைப்பு என்பவற்றின் பின்னணியில் மேலுள்ள நிலைமையினை மதிப்பீடு செய்க.

**(100 புள்ளிகள்)**

2. பெருந்தொற்றுக் காலப்பகுதியில் மக்களின் நடத்தையினை ஒழுங்குபடுத்துவதற்காக '*பெருந்தொற்று (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*' என்ற தலைப்புடைய சட்டமூலமொன்றை தமாஸா என்ற அரசானது முன்மொழிவு செய்துள்ளது. இச்சட்டமூலமானது பின்வருகின்ற ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது:

(அ) மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருப்பதற்கும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வெளிக்காட்டுவதற்குமான சுதந்திரமானது விதந்துரைக்கப் பட்ட தகுதிவாய்ந்த அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுகின்ற மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளாமல் தமது வசிப்பிடத்தைவிட்டு வெளியேறுவதற்கு எந்தவொரு நபரும் அனுமதிக்கப்படமாட்டார் என்பதுடன், தமது வசிப்பிடத்தைவிட்டு அவர்கள் வெளியேறும்போது தடுப்பூசிக்கான தமது அட்டையினை அவர்கள் எடுத்துச்செல்லுதலும் வேண்டும்;

(இ) பெருந்தொற்று நோயொன்றினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்று நோயறியப்பட்ட எந்தவொரு நபரையும் சுகாதார அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட மருத்துவமனை தவிர்ந்த எந்தவொரு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்படலாகாது. நோய்தொற்றியுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை பொதுமக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக திறந்தவெளி தரவுகள் தளத்தில் வெளிப்படுத்தலாம் ;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவசகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு தமாஸா நாட்டின் சனாதிபதி தத்துவங்கொண்டுள்ளார். அத்தகைய ஒழுங்குவிதிகளானவை வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் தொழில்படுதன்மையைப் புறத்தொதுக்கிச் செல்கின்ற, திருத்துகின்ற அல்லது நிறுத்திவைக்கின்ற சட்ட விளைவினைக் கொண்டிருத்ததாதல் வேண்டும்.

மனித உரிமைகள் அமைப்பொன்றின் ஆலோசகரொருவராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர் என்றும் சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமைகள் சட்டப்பரப்புக்களின் பின்னணியில் இச்சட்டமூலத்தினது மேலுள்ள ஏற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை எழுதுவதற்கான பணியும் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனக் கருதிக்கொள்க. தமாஸா நாட்டினது அரசியலமைப்பானது இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்குச் சமமானதாகும். உமது அறிக்கையை எழுதுக. **(100 புள்ளிகள்)**

3. ஹேலி என்ற நம்பிக்கை கொண்டவர்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமைக்காக பிரதிநிதித்துவம் செய்வதாகக் கோருகின்ற ஹேலி ஆர்மி என்னும் மதச்சார்புடையதொரு ஆயுதக்குழுவை ராஜ்தான் நாட்டுப் படையினர் 2015ஆம் ஆண்டில் தோல்வியடையச் செய்தனர். அது தோல்வியடைவதற்கு முன்னர், ஹேலியானது இயற்கை வளங்கள் நிறைந்ததும் தனித்ததுமான பிராந்தியமான ராஹுல் என்பதனை ஹேலி ஆர்மியானது தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

(அ) அதிக எண்ணிக்கையான ஹேலி போராளிகள் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். ராஜ்தான் நாட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளானவை, தடுத்துவைப்பிலுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது தொடர்பான தீர்மானங்களைச் செய்வதற்கான தத்துவத்தை பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கியுள்ளது.

(ஆ) ராஹுல் பிராந்தியத்திலிருந்து கனிமப்பொருட்களை அகற்றுவதற்கான ஒப்பந்த மொன்றினை ஓலா என்ற பல்தேசியக் கம்பனியொன்றுடன் ராஜ்தான் நாட்டு அரசாங்கமானது செய்துகொண்டது. ஓலா கம்பனியின் செயற்பாடுகள் காரணமாக, ராஹுல் பிராந்தியத்தின் காற்று மாசடைந்துள்ளதுடன், சுவாச நோய்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக ராஹுல் பிராந்தியத்தின் காடுகள் அழிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட நிலச் சரிவொன்றினால் 20 பேர் கொல்லப்பட்டதுடன் வீடுகளும் அழிந்துபோயுள்ளன.

(இ) ஹேலி ஆர்மியினது மீளுருவாக்கத்தைத் தடுப்பதற்காக, ஆயுதமோதலையும் ஹேலி ஆர்மியின் அங்கத்தவர் எவரினதும் இறப்பினையும் நினைவுபடுத்துவதனை ராஜ்தான் நாட்டு அரசாங்கமானது தடைசெய்துள்ளது.

(ஈ) ராஹுல் பிராந்தியத்தில் புது வகையானதொரு கிருமித் தொற்றினால் உள்ளூர்வாசிகள் சிலர் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். இந்த கிருமியானது 40 வீதம் இறப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த கிருமி பரவுவதனைத் தடுப்பதற்கு, உயிரியல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிற்பகல் 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரை நாளாந்தம் ஊரடங்குச் சட்டத்தை ராஜ்தான் நாட்டு அரசாங்கமானது பிரகடனப்படுத்தியுள்ளது. உயிரியல் பாதுகாப்புச் சட்டத்தில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதற்கான எந்தவொரு ஏற்பாடும் கிடையாது.

(உ) ராஹுல் பிராந்தியத்தின் மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை சுகாதார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக ஜேனா என்ற பத்திரிகையாளரொருவர் விண்ணப்பித்துள்ளார். தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக அத்தகைய தகவல்கள் வழங்கப்படமாட்டாதென்று அமைச்சு மறுத்துள்ளது.

ராஜ்தான் நாட்டின் மனித உரிமைகள் பிரச்சனைகளை இனங்காண்பதுடன், மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையில் அவற்றினை மதிப்பீடு செய்க.

**(100 புள்ளிகள்)**

4. யோகா என்ற நாட்டிலுள்ள பொலிஸ் அதிகாரியொருத்தியான றீட்டா என்பவள் அடுத்தகட்ட பதவியுயர்வுக்காக விண்ணப்பித்திருப்பினும், அவளுடைய விண்ணப்பத்தை, (அ) பெண்களுக்கு 10 பதவிநிலைகள் மாத்திரமே காணப்படுவதுடன், அவற்றில் எந்தவொரு வெற்றிடமும் தற்பொழுது கிடையாது என்றும், (ஆ) உடலுயரத் தேவைப்பாடான 5 அடி 6 அங்குலம் என்பதனை அவள் கொண்டிருக்கவில்லை என்றும் அறிவுறுத்தி அவளது விண்ணப்பத்தை அவளின் கட்டளையதிகாரி திருப்பியனுப்பி வைத்துள்ளார். பதவியுயர்வுக்குத் தேவையான ஏனைய தகைமைகளான 20 வருட சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் மற்றும் பொலிஸ் துறைக்கான முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் என்பவைகளாகும். இத்தகைய தேவைப்பாடுகள் இரண்டையும் றீட்டா நிறைவுசெய்துள்ளாள். யோகா நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வெளியிட்டுள்ள நாட்டின் குற்றவியல் நீதிமுறைமை தொடர்பான அறிக்கையொன்றில், பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதன் அளவீடானது குறைந்துள்ளமைக்கான காரணங்களாக பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தாமை மற்றும் முறைமையான புலன்விசாரணைகளின் பயனுறுதியற்ற தன்மை என்பவற்றைக் காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளது. ராகு என்று அடையாளப்படுத்தப் படுகின்றவர்களான மிகச் சிறியதொரு சிறுபான்மை இனக்குழுவானது பொலிஸ் தொழிற்படையில் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை என்பதனையும் ஆணைக்குழுவானது சுட்டிக்காட்டியுள்ளது. பொதுவாக, புதிதாகப் பொலிஸில் சேர்க்கப்படுபவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகள் போதுமானவையாக இல்லையென்பது தொடர்பாகவும் தனது கவலையினை ஆணைக்குழு குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. பொலிஸ் பயிற்சி வழங்குனரொருவர் தன்னினச் சேர்க்கையைக் கண்டித்துச் செய்துள்ள கூற்றுக்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கையானது கடுமையான கவனத்தைச் செலுத்தியுள்ளது. யோகா நாட்டில், 'இயற்கைக்கு மாறான பாலுறவில்' ஈடுபடுவதானது குற்றவியல் தவறொன்றாகும்.

இச்சம்பவத்திலுள்ள மனித உரிமைகள் பிரச்சனைகளை இனங்காண்பதுடன் பகுத்தாராய்வு செய்க. (100 புள்ளிகள்)

5. மனித உரிமைகள் பாதுகாப்புக்கான பிராந்தியப் பொறிமுறைகளானவை, உலகில் வேறுபட்ட பிராந்தியங்களின் தனித்துவமான மனித உரிமைகள் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளவையாகும். இத்தகைய பொறிமுறைகளானவை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை முன்னேற்றகரமானளவுக்கு கூட்டிணைப்புச் செய்துள்ளதனையும் காணலாம்.

நீர் உடன்படுகின்றீரா? தத்தமது பிராந்தியங்களில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளானவை பயனுறுதிமிக்க வகையில் எவ்வாறு பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதனைத் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு பிராந்தியப் பொறிமுறைகளை ஒப்பீடுசெய்து வேறுபடுத்திக் காட்டுக. தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களின் மனித உரிமைகள் பாதுகாப்புப் பொறிமுறைகளின் சாதனங்களிலிருந்து குறிப்பான உதாரணங்களைச் சுட்டிக்காட்டி உமது விடையினை ஆதாரப்படுத்துக. (100 புள்ளிகள்)

6. சாமா என்பவள் மேகலாந்து என்ற நாட்டின் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருத்தியாவாள். பெருந்தொற்றுக் காலப்பகுதியில், நாட்டிலுள்ள பணவீக்கம் மற்றும் ஊழல் என்பவற்றுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் அமைதியான பகிரங்க ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடுசெய்தாள். பிரசைகளின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்ய அரசாங்கம் தவறியுள்ளமை தொடர்பான செய்திகளைப் பதிவேற்றஞ் செய்வதற்காக இந்த ஆர்ப்பாட்டத்தின் பாகமாக சமூக வலைத்தள ஊடக இயக்கமொன்றையும் சாமாவும் அவளுடைய உடனுழைப்பாளர்களும் ஒன்றுசேர்ந்து தொடங்கியுள்ளனர். அச்செய்திகளி லொன்று சமூக வளைத்தளங்களில் மணித்தியாலங்களுக்குள் மிகவும் பல்கிப்பரவியது.

(அ) அச்செய்தி பல்கிப்பரவிய இரண்டாம் நாளன்று, தேசிய கனணிக் குற்றத் தடுப்புப் பிரிவு சாமாவைத் தொடர்புகொண்டு, இதுவரை பகிரப்பட்டுள்ள அனைத்துச் செய்திகளையும் அகற்றிவிடுமாறு அவளை வேண்டிக்கொண்டது. சிரமமிக்க இக்காலப் பகுதியில் பொதுமக்களின் நெறிமுறைகளைப் பாதிக்கும் எதிர்மறையான தாக்கமொன்றை அது ஏற்படுத்தியுள்ளதாகவும் இந்த இயக்கச்செயற்பாட்டை சாமா தொடர்ந்து செய்யக் கூடாதென்றும் அப்பிரிவின் அலுவலர்கள் அவளை அச்சுறுத்தினர்.

(ஆ) சாமா அச்சுறுத்தப்பட்ட அதே நாளன்று, சாமாவினது உடனுழைப்பாளர்கள் இருவரான ராஜா என்பவனும் தில்ஷான் என்பவனும் உள்ளூர் பொலிஸாரினால் எக்காரணங் களும் கூறப்படாமல் கைதுசெய்யப்பட்டனர். ராஜாவினதும் தில்ஷானினதும் குறிப்பிட்ட கண்டன இயக்கத்தின் சமூக வலைத்தளப் பதிவுகளைக் காண்பித்து அயலவர்களிடம் ராஜாவினைப் பற்றியும் தில்ஷானைப் பற்றியும் பொலிஸார் விசாரித்துள்ளனர் என்பதாகக் கைதுசெய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் கோருகின்றனர்.

(இ) இரண்டு நாட்களின் பின்னர், ராஜா மற்றும் தில்ஷான் ஆகியோருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதனைப் பரிசோதனை செய்யாமல் அரசாங்க நோய் தனிமைப்படுத்தல் நிலையமொன்றுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சாமா அறிகின்றாள். குறிப்பிட்ட நோய் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ராஜாவும் தில்ஷானும் 14 நாட்கள் தங்கியிருக்க வேண்டியிருப்பினும், தனிமைப்படுத்தல் காலம் ஆரம்பித்து 7 நாட்கள் கடுங்காயங்கள் காரணமாக அவர்கள் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தனர். தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அவர்கள் கொண்டுசெல்லப்பட்ட நாளன்று அவர்களிருவரும் நிலையத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

சாமா, ராஜா மற்றும் தில்ஷான் ஆகியோரினது வழக்கறிஞரென உம்மைக் கருதிக்கொண்டு, அவர்களின் எத்தகைய உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதனை இனங்காண்பதுடன், மேகலாந்து நாட்டின் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கடப்பாடுகளின் பின்னணியில் அவர்களின் உரிமைகளை பகுத்தாராய்வு செய்க. முக்கிய அனைத்து சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களையும் மேகலாந்து அரசானது ஏற்றங்கீகரித்துள்ளது என்றும் கருதிக்கொள்க. **(100 புள்ளிகள்)**

*******************